# ஜெயகாந்தனின் நாவல்களில் சமூகம்

**செ.கயல்விழி**
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் உயராய்வு மையம்
கணேசர் கலை அறிவியல் கல்லூரி
மேலைச்சிவபுரி

**மலர்:** 3

**இதழ்:** 2

**தொகுதி:** II

**மாதம்:** அக்டோபர்

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

பண்டையகாலத்தில் நாடோடியாக அலைந்துதிரிந்த மனிதன் தன்வாழ்வின் தேவைக்காக உருவாக்கிய கூட்டமைப்பு சமுதாயமாகும். தனி மனிதர்கள் பலர் சேர்ந்த தொகுப்பு சமுதாயம் எனப்படுகிறது. மனிதர்களின் மரபு, பண்பாடு, செயல்பாடு, உடல் போன்றவற்றில் ஒத்த நிலையும் எதிர் நிலையும் உள்ளன. தனி மனிதனை உருவாக்கும் ஆளுமையில் சமுதாயம் குறிப்பிடதக்க அளவில் செல்வாக்குச் செலுத்துகின்றது. சமூகத்தில் இணைந்து வாழும் மக்களிடையே ஒரு குழுவினருக்குப் பாதிப்பு ஏற்பட்டாலும் அது சமுதாய அமைப்பினைப் பாதிக்கும். சமூதாய வளர்ச்சி என்பது தனி மனிதர்களின் ஆளுமை ஆகும். தனி மனிதனைச் சமுதாய மனிதனாக மாற்றுவது சமுதாயப் பண்பாட்டின் சிறப்பாகும். தன்னளவில் ஒருங்கிணைவையும் நெறியினையும் கொண்டுள்ள பண்பாடு சமுதாய அறத்தினை முதன்மைப்படுத்துகின்றது. அதன் மூலம் சமுதாயம் மேம்பாடு அடைகின்றது.

மக்களிடையே ஏற்படும் சமூக உறவுமுறைகள் சமூகத்தை உருவாக்குகின்றது. மக்கள் கூட்டம் கூட்டமாக வாழ்வதைச் சமுதாயம் எனக் குறிப்பிடலாம். ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் பன்னெடுங்காலமாக ஒன்று சேர்ந்து வாழ்வதற்காக மக்கள் ஏற்படுத்திக் கொள்ளும் அமைப்பு சமூகம் எனப்படுகிறது. மக்களின் பழக்க வழக்கம், பண்பாடு போன்றவை அவர்கள் வாழும் பொருளாதார அமைப்பையும் சூழ்நிலையையும் நில அமைப்பையும் பொறுத்து அமைகிறது.

**சமூதாயம் பற்றிய அறிஞர்களின் கருத்துக்கள்**

**“மனிதன் நாகரிகம் பெறத் தொடங்கிய காலத்தில் இருந்தே தன்னைக் காத்துக்கொள்ளவும் சமூக உறவையே அடிப்படையாகக் கொண்டான். ஒவ்வொரு கணத்திலும் சமூகத்தோடு இணைந்து வாழப் பழகிக்கொண்டான். சமூக உறவின் காரணமாக மனிதனுக்குள் படைப்பாற்றல் தோன்றியது. பல்வகையான இலக்கிய ஆக்கங்கள் தோற்றம் கொண்டன. சமுதாய நிகழ்வுகள் அவன் படைப்புகளில் இடம்பெறத் தொடங்கின”**

**பொதுவான இலட்சியத்தை அடையக் கூட்டுறவாகச் செயற்படும் பகுத்தறிவுள்ள மக்களின் நிலையான ஒழுக்க நியதிக்குட்பட்ட பிணைப்பு சமூகம் ஆகும்.**

**“இயற்கையிலேயே மனிதன் சமுதாய இயற்புடையவனாக உள்ளான்”** என முதலில் வாதிட்டவர் அரிஸ்டாட்டில்.

**பிறக்கும் போதே மனிதனின் இயல்புகள் சமுதாயத்தோடு ஒன்றுபடும் தன்மைகளைப் பெற்றுள்ளன. இத்தன்மைகள் மொழி, பழக்க வழக்கங்கள், அறிவார்ந்த சிந்தித்தல் போன்றவற்றில் புதைந்து கிடக்கின்றன என்றும் அவர் கூறினார்.**

தொடக்காலச் சமுதாயம் ஏற்றத்தாழ்வுகளின்றி, ஒரு படித்தானதாக இருந்தது என்றும், மனித சமுதாயத்தில் குடும்பச் சிக்கல்களைக் தீர்க்கும் நீதிமுறை, ஒழுக்கமுறை, மொழி போன்ற சில கூறுகள் தொடக்கத்திலேயே தோன்றி விட்டன.

மனிதன் தன்னைச் சமுதாயதிலிருந்து அப்புறப்படுத்திக்கொண்டு ஒதுங்கிவிடாமல் தன் காலச் சமுதாயத்தின் பழக்கவழங்களையும், பண்பாட்டுக் கருத்துக்களையும் அவற்றை ஏற்று வாழ்வது, சமூகவயமாதல் ஆகும். ஓர் இலக்கியம் தான் தோன்றிய காலச் சமுதாயச் சூழலை சித்தரிப்பதாகக் கருதலாம்.

மனிதன் ஒரு சமூகப்பிராணி என்ற அரிஸ்டாட்டிலின் கருத்திற்கேற்ப தனித்து இயங்க இயலாது. குடும்பம், சமூகம் என்று மற்றவர்களுடன் சேர்ந்து வாழும் இயல்புணர்ச்சி மனிதனிடத்தில் இயற்கையாகவே அமைந்துள்ளன. அதனால் தான் மனித வாழ்வைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. சமுதாயம் முற்றிலும் வளர்ச்சியடைய குடும்பம் ஒரு அடிப்படையாக உள்ளது. குடும்பம் சமுதாயத்தின் அடித்தளமாகக் கருதப்படுகிறது. மனிதனின் பொது வாழ்கையைப் புரிந்துகொள்ள குடும்பம், சமுதாயம், பொருளாதாரம், நீதி, பண்பாடு ஒழுக்கம், சமயம், கல்வி முதலிய நிறுவனங்களை ஆராய்ந்து அறிய வேண்டும்.

சமுதாயத்தின் ஓர் அங்கமாக விளங்கும் படைப்பாளிகள் தான் வாழும் காலத்தில் சமுதாயச் சிக்கல்களை இலக்கியத்தின் கருவாகக் கொள்கின்றார் ஜெயகாந்தனின் இந்த நேரத்தில் இவள், பாட்டிமார்களும் பேத்திமார்களும், அப்புவுக்கு அப்பா சொன்ன கதைகள் ஆகிய நாவல்களில் இடம் பெறும் சமுதாயக் கருத்துக்களை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

### நம்பிக்கையும் பழக்க வழக்கங்களும்

மனித சமூகத்தில் எல்லோரும் நம்பிக்கையின் அடிப்படையில் வாழ வேணடியவர்கள் என்றாலும், தேவையற்ற மூட நம்பிக்கையை நீக்கி வாழ வேண்டும். பழங்காலம் முதல் எல்லா இனங்களிடத்தும் பல நம்பிக்கைகள் நிலவி வருகின்றன. அவற்றில் பலவும் இன்று வரையில் ஆற்றலோடு வாழ்ந்து வருவது வியப்புக்குரியதாகும். நம்பிக்கையின்பால் உள்ள ஆர்வமும், தீமையின்பால் உள்ள அச்சமும் பெரும்பான்மையான நம்பிக்கைக்கு அடிப்படை எனலாம்

ஜெயகாந்தன் தனது நாவலில் ஓரிரு நம்பிக்கையச் சொல்லிச் செல்கிறார். இந்த நேரத்தில் இவள் என்ற நாவலில் மக்களின் அறியாமயை ஆசிரியர் சிறப்பாகச் கூறியுள்ள விதத்தை தெளிவாகக் காணலாம். ‘‘ஆற்றில் புது வெள்ளம் வந்து கரைபுரண்டு போகிறது. ஊரே திரண்டு போய்ப்பார்த்து வருகிறது. தெருவில் போகிற மக்கள் வாயைப் பிளந்து கொண்டு, கையை வீசீ வீசீ வெள்ளத்தைப் பற்றி தங்களது அறியாமையில் மூடநம்பிக்கையை வைத்துக்கொண்டு பிரலாபிக்கிறார்கள். என்னவோ ஒரு வகை மகிழ்ச்சி, ஏதோ ஒரு வகைப் பீதி, சேரியில் இருந்து ஊருக்குள் வருகிற பள்ளர்களும், பறையர்களும் பரிதாபமாகக் கடவுளைப் பிரார்த்திக்கிறார்கள் என்றும், குடியானவர் தெருவில் வந்து மனிதர்களிடம் மெய்யாக முறையிடுகிறார்கள்: பொய்யாக அழுகிறார்கள் என்றும், இன்னும் ஒரு பொழுதுக்கு வெள்ளம் கரைமீறிவிடும் என்றும் அவர்கள் நம்பி இருந்தபோதிலும் எல்லோருமே வெள்ளத்தைப் போய் வேடிக்கை பார்க்கிறார்கள், ரசிக்கிறார்கள் பரவசம் கொள்ளுகிறார்கள்.

ஆனால் இந்த நேரத்தில் இங்கு வெள்ளம் வருமென்று இவர்கள் எதிர்பார்க்க வில்லையாம் மழையே இல்லாமல் எப்படி இவ்வளவு வெள்ளப்பெருக்கு வர முடியும் என்று ஏதோ தங்களது உத்தரவுக்கு உட்பட்ட ஒன்று கைமீறிப் போனது மாதிரி வியப்பு மேலிடச் சிலர் விவாதம் செய்தனர்.’’(இ.நே.இ.ப.07) என ஆசிரியர் கூறி அவர்களது நம்பிக்கையை உறுதி செய்யும்விதமாக அடிக்கடி இந்த ஆற்றில் வெள்ளம் வரும் (இ.நே.இ.ப.20) என்று கூறியுள்ளார்.

ஊரின் மேற்கே அணைகட்டப் போவதாக ஊர்பெரியவர்கள் வெகு காலமாய்ப் பேசி வருவதையும், வெகுதொலைவில் உள்ள மேற்குப்பக்க ஊரில் அணைகட்டிவிட்டால் இது மாதிரி ஆற்றில் வெள்ளம் வராது என்ற நம்பிக்கைக்கு மேல் தண்ணீரே வராது (ப-20) என்ற மூடப்பழக்கம் அவர்களிடத்தில் இருந்ததை அறிய முடிகிறது.

**குடும்பம்**

குடும்பம் என்பது கோவில் அதில் தலைவன் தலைவியர் தெய்வங்கள். ''சமூகக் கட்டுக்கோப்பிற்காக குடும்பம் என்ற அலகு மிகவும் செம்மையாக அமைதல் வேண்டும். குடும்பத்தில் ஒருவர்பெறும் பயிற்சியும் பட்டறிவும் அவருடைய சமூகபார்வையை வடிவமைக்க கூடிய அடிப்படைகள் என்றும் கூறலாம். குடும்பத்தில் செழுமை கண்டவர் சமூக வாழ்வில் வெற்றி அடையும் வாய்ப்பினை மிகுதியாகப் பெறுவர். குடும்ப வாழ்வுவின் சீரழிவு ஒரு சிலரை வழிதவறச் செய்து விடும் என்பது உண்மை'' எனும் கருத்து இங்கு நோக்கதக்கது.

**குடும்பக் கட்டுப்பாடின்மை**

ஜெயகாந்தன் ஆய்வுக்குரிய நாவல்களில் குடும்பக்கட்டுபாட்டினைப் பற்றிக் கூறியுள்ளார். இந்த நேரத்தில் இவள் - நாவலில் தலைமைக் கதாபாத்திரமான மகுடேசன் பிள்ளைக்கு இரண்டு மனைவிகள், ஆறு பெண்மக்கள், மூன்று ஆண்பிள்ளைகள் இரண்டாவது மனைவி கோதையம்மாள்.

''பெண்ணுக்கு இன்றுவரை தனியான இடம் என்ற ஒன்று நம்நாட்டில் இல்லை. மனைவி, தாய், சகோதரி, என்ற நிலையில் அவர்கள் ஆடவரைச் சார்ந்தே வாழ்ந்து தீர வேண்டிய நிலை'' பெண் என்றால் குடும்பப்பாரம் சுமப்பவள், துணி துவைக்கவும், வீட்டைப்பராமரிக்கவும், சமையல் செய்யும் எந்திரம் என்ற நிலை இன்னும் பல இடங்களில் இருந்து வருகிறது, அந்த காலத்தில் குடும்பக் கட்டுப்பாடு என்ற நிலை இல்லாததாகவே அதிகம் காணப்படுகிறது.

அதுபோலவே அம்பிகை அம்மாள் குழந்தைகள் பெற்றெடுத்தலும், கணவன், குடும்பம் என்ற பொறுப்புணர்ச்சியோடு வாழ்ந்ததைப்பற்றியும் மட்டுமே அவளது செய்கைகாளாக ஆசிரியர் கூறியுள்ளார். தன்கென அவள் வாழவில்லை என்பது உறுதிபட அவளின் செயல்கள் மூலம் தெரிகிறது. திருமணம் ஆன முதலில் இருந்து இறக்கும் தருணத்தில்கூடப் பிள்ளையைப் பெற்றெடுத்துவிட்டுத் தான் இறுதியில் இறக்கிறாள்.

**''ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்ளுதல் அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம்''** என்றாலும் நம் சமூகம் பெண்ணையும் , ஆணையும் சரி நிகராய் மதிக்கும் பக்குவமின்றி தாழ்ந்து கிடக்கிறது.

அந்த காலத்தில் இருபது வயது வரை திருமணமாகாத பெண்களுக்கு இரண்டாதாரமாகத் தான் மணம் ஏற்படும் (இ.நே.இ.ப.51) என்ற நிலை இருந்தது. இதன் மூலம் பெண்கள் பரிதாபமாக இருந்ததை அறிய முடிகிறது. அக்கால நடப்பை ஆசிரியர் தன் நாவலில், பாத்திரங்களின் மூலம் விளக்கியுள்ளார்.

கோதையை மகுடேசன் இரண்டாம் திருமணம் செய்துகொண்டான் என்ற திருமண முறை இங்குச் சுட்டப்பட்டுள்ளது.

**''அப்புவிக்கு அப்பா சொன்ன கதைகள்''** நாவலில் சிங்காரத்திற்கு எட்டுக் குழந்தைகள். அதனால் பொருளாதாரத்தில் பற்றாக்குறை ஏற்படுகிறது; வறுமைக்கு ஆளாகிறார்கள். கட்டுபாடில்லாத மனிதர்கள். இவ்வாறு இருந்தால் சாதாரண தேவையைக் கூட நிவர்த்தி செய்ய இயலாத நிலை ஏற்படுகிறது.

**ஒன்றுக்கு மேற்பட்ட திருமணம்**

ஆசிரியர் பலதரப்பட்ட திருமணங்களைக் தனது நாவலில் கூறியுள்ளார். மகுடேசன் அம்பிகை, கோதை சிங்காரம்-அமுதவல்லி, அம்மாக்கண்ணு, அம்மணியம்மாள் என ஒரு ஆண் இரண்டு, மூன்று திருமணங்கள் செய்ததைப் பற்றிச் சுட்டிக்காட்டியுள்ளார்.

**மறுமணம்**

''பத்தொன்பது, இருபதாம் நூற்றாண்டுகளில் நடைபெற்ற பால்ய விவாகம் சமூகத்தில் பெண்ணினத்தை வேரறுக்கும் ஒரு கொடுமையான நிகழ்வாக இருந்தது. இதனால் பதினைந்து வயது நிரம்பாத பெண்கள் நூற்றுக்குப் பதினைந்து விழுக்காட்டிற்கு மேல் கைம்பெண்களாக இருந்தனர். இவர்கள் மறுபடியும் திருமணம் செய்து கொள்வது சமூகத்தால் மறுக்கப்பட்டது. பண்டையக் காலத்தில் மனைவியர் இறந்தவுடன் ஆண் மறுமணம் புரியமுயலுகிறான். அதுவும் தக்க

பருவமும், எழிலும் பொருந்திய இளங்கன்னியர்களைத் தன் துணைவியாகத் தேர்ந்தெடுத்துக்கொள்கிறான்'' தந்தை பெரியார் இதனைக் கடுமையாகச் சாடினார்.

**இந்த நேரத்தில் இவள் -** நாவலில் தலைமைப் பாத்திரமான மகுடேசன் தனது பத்தொன்பது வயதில் அம்பிகைக்கு மாலையிட்டார். நாற்பத்தைந்து வயதுக்குள் இவரது ஒன்பது குழந்தைகள். அம்பிகை கணவன், குடும்பம், குழந்தைகள் என மற்றவர்களுக்காக மட்டுமே வாழ்ந்தவளாக படைக்கப்பட்டுள்ளாள். அவள் இறந்ததும் ஐம்பது வயது நிரம்பிய மகுடேசன் இரண்டாம் திருமணம் செய்ய முடிவு செய்து, நல்ல குணவதியான கோதையம்மாளை மறுமணம் செய்கிறார். அப்பெண் தனக்கு திருமணம் ஆகாத நிலைலைய நினைத்து மகுடேசனை திருமணம் செய்ய ஒப்புக்கொள்கிறாள். அவர்கள் வாழ்ந்த கால கட்டம் சாதகமாக இருந்தது.

கோதை தன் மூத்தாளின் பிள்ளைகள் தன்னைவிடவும் வயதில் மூத்தவர்களாக இருந்தாலும் அவர்களையும் தன் பிள்ளைகளைப் போல பார்த்துக்கொண்டாள். கணவனின் அன்பைப்பெற்றாள் ஆறுமாதம் வரை வாழ்ந்துவிட்டு கணவன் இறந்ததும் இளம் விதவையானாள்.

**பாட்டிமார்களும் பேத்திமார்களும் -** நாவலில் சிங்காரத்திற்கு அவனது தமக்கை பொன்னமாளின் மகள் அமுதவல்லியைத் திருமணம் செய்துவைத்தனர். திருமணமான ஒரு வருடத்திற்குள்ளே குழந்தையைப் பெற்றெடுத்து விட்டு இறந்து விட்டாள். தன்மனைவி இறந்ததும் சிங்காரம் தனது ஆசானின் மகளான அம்மாகண்ணுவை இரண்டாம் திருமணம் செய்து கொண்டான். இவர்கள் இருவருக்கும் ஏழு குழந்தைகள், ஒன்றன்பின் ஒன்றாக ஆறு குழந்தைகள் இறந்துவிட்டன.

ஆண்பிள்ளையான அப்பு என்ற சிறுவன் மட்டுமே இப்போது உயிருடன் இருக்கிறான். சிங்காரம் எல்லாவற்றையும் இழந்த சோகத்தில், தன்னைத் விட்டு எல்லாம் கை மீறி சென்றதை நினைத்து வருந்தி சொந்த ஊரை விட்டு பட்டணம் சென்று அங்கு தனக்கு துணைவேண்டுமென அம்மணியம்மாள் என்ற பெண்ணை மூன்றாம் தாரமாகத் திருமணம் செய்துகொள்கிறான். அவர்களுக்கும் ஒரு பெண் குழந்தை.

இவ்வாறு காலகாலமாகப் பெண்கள் மட்டும்தான் குடும்பப்பொறுப்பையும், துன்பத்தையும் தாங்கிகொள்பவர்களாகவும், கண்ணும் கருத்துமாகக் குடும்பத்தை ஒழுக்கத்துடன் நடத்திச் செல்பவர்களாகவும் திகழ்கின்றனர். ஆண்கள் மட்டும் எந்தவித கவலையின்றி வாழ்கின்றனர் என்பதையும் பாத்திரங்களின் மூலமாக ஆசிரியர் கூறியிருக்கிறார்.

ஆண்கள் எந்த தவறு செய்தாலும் கொடுமை இழைத்தாலும் அவர்களை நல்வழிப்படுத்தி குடும்பத்தைப் பாதுகாப்பது போன்ற செயல்களைப் பொறுத்துக்கொண்டு வாழ்பவர்களே பெண்கள் எனவும், ஆண்கள் எத்தனை திருமணம் வேண்டுமாலும், என்ன தவறுகள் செய்தாலும் அவர்கள் ஆண்கள் என்பதில் ஆதிக்கம் செய்வதை நாவல் சிறப்பாக விளக்கியுள்ளது.

## முடிவுகள்

படைப்பாளிகள் சமூகப் பொறுப்புடையவர்கள். ஜெயகாந்தன் நாவல்கள் சமுதாயம் பற்றி பெரிதும் பேசுபவை. அவ்வகையில் **இந்த நேரத்தில் இவள், பாட்டிமார்களும் பேத்திமார்களும், அப்புவுக்கு அப்பா சொன்ன கதைகள்-** ஆகிய மூன்று நாவல்களிலும் சமுதாயச் சிந்தனைகள் நிறைந்திருப்பதைக் காணமுடிகிறது. ஆசிரியர் மக்களிடம் காணப்பட்ட நம்பிக்கை, நாகரிகம், அறியாமை ஆகியவற்றைச் சிறப்பாக விளக்கியுள்ளார்.

திருமண முறையில் ஆண்கள் ஒன்றுக்கு மேற்பட்ட திருமணங்களைச் செய்கின்றனர். மனைவி இறந்ததும் மறுமணம் வயதுக்கு மீறிய ஆசை கொள்ளல் போன்றவற்றை எடுத்துக்காட்டியுள்ளார்.

பெண்களின் நிலையாக வாழவெட்டி, குழந்தை மணம், அதிகக் குழந்தைகள் பெற்றுக்கொள்ளுதல், விதவைநிலை ஆகியன பற்றியும் அதனால் ஏற்படும் தீமைகள் பற்றியும் சிறப்பாக விளக்கியுள்ளார்.

## அடிக்குறிப்புகள்

1. பரிமளா, ச. வாஸந்தி நாவல்களில் ஓர் ஆய்வு - ப.03.
2. பக்தவச்சலபாரதி, சீ. பண்பாட்டு மானிடவியல் - ப.160.
3. பன்னீர்செல்வம், துரை. பிரபஞ்சன் படைப்புகளில் சமூகம் - ப.99.